SINCE 2013

We Shine Academy®

guiding you to get through

TNPSC | TNUSRB | TET | SSC | BANK EXAM

**DAILY CURRENT AFFAIRS DATED ON 17/02/2026**



# இன்று தமிழக இடைக்கால பட்ஜெட்: முக்கிய அறிவிப்புகள் வெளியாகும்



மாநில திட்டக் குழுவால் தயாரிக்கப்பட்ட 2025–2026– ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு பொருளாதார ஆய்வறிக்கையை சென்னை தலைமைச் செயலகத்தில் திங்கள்கிழமை வெளியிட்ட முதல்வர் மு.க.ஸ்டாலின். உடன் நிதியமைச்சர் தங்கம் தென்னரசு, தலைமைச் செயலர் நா. முருகானந்தம், மாநில திட்டக் குழுவின் செயல் துணைத் தலைவர் ஜெ. ஜெயரஞ்சன், நிதித் துறைச் செயலர் த.உதயச்சந்திரன், திட்டம் மற்றும் வளர்ச்சித் துறையின் செயலர் சஜ்ஜன் சிங் ரா. சவான், நிதித் துறை துணைச் செயலர் சி.ஏ. ரிஷப்.

தமிழ்நாடு அரசு
**மாநில திட்டக் குழு**

## சமூக நீதியுடன் இரட்டை இலக்க வளர்ச்சி! தலை நிமிர்ந்து நிற்கும் தமிழ்நாட்டின் எழுச்சி!

**கடந்த 5 ஆண்டுகளில் நமது பொருளாதார வளர்ச்சி 11.19% - இது நாட்டின் சராசரி வளர்ச்சி விகிதத்தில் ஏறத்தாழ இருமடங்கு.**

*ஆதாரம் - தமிழ்நாடு பொருளாதார ஆய்வறிக்கை 2025-26*



### உற்பத்தி சக்தி மையம்

தமிழ்நாட்டின் உற்பத்தித் தொழிற்துறை, 14.74% வளர்ச்சி விகிதத்தை உறுதியுடன் பதிவு செய்துள்ளது. இது அகில இந்திய சராசரியான 4.5%-ஐ விட மும்மடங்கு அதிகம். இந்தியாவின் உற்பத்தித்துறை வேலை வாய்ப்புகளில் தமிழ்நாட்டின் பங்களிப்பு முன்னிலை வகிக்கிறது. நாட்டின் மொத்தத் தொழிற்சாலைப் பணியாளர்களில் இது 15% ஆகும். தொழிற்சாலைகளின் வளர்ச்சியில், வேலை வாய்ப்புகள் பெருகுகின்றன. குடும்பங்கள் வளம் பெறுகின்றன.

### வேலை வாய்ப்பு வளம்

தமிழ்நாட்டில் தொழிலாளர் பங்கேற்பு 72.1 சதவீதமாக உயர்ந்திருக்கும் நிலையில், வேலையின்மை 3.5% ஆகக் குறைந்துள்ளது. அதிகமானோர் வேலை செய்கிறார்கள். அதிகமானோர் வருமானம் ஈட்டுகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

### தனிநபர் வருமான உயர்வு

தமிழ்நாட்டில் தனிநபர் வருமானம் ரூ.3.62 லட்சமாக உயர்ந்துள்ளது. இது நாட்டின் சராசரியைவிட 1.77 மடங்கு அதிகம். மக்களின் வாங்கும் திறன், சிறந்த வாழ்க்கை முறை மற்றும் குடும்பங்களுக்கான பொருளாதார பாதுகாப்பினை இது காட்டுகிறது.

### உயர்கல்வியில் முதன்மை

இந்திய அளவில், தமிழ்நாட்டின் மொத்த உயர்கல்வி சேர்க்கை விகிதம் 4.7% அதிகம். ஏறத்தாழ 2-ல் 1 இளைஞர் கல்லூரியில் பயில்கின்றார். இது நாட்டின் சராசரி விகிதமான 28.4%-ஐ விட அதிகம்.




**தமிழ்நாட்டின் வளர்ச்சிப் பயணத்தில் ஒருவரையும் பின்தங்க விடமாட்டோம்!**

### வேளாண்மை பலம்

பொருளாதார மேம்பாட்டிற்குத் தமிழ்நாட்டின் வேளாண்மை ரூ.1.9 லட்சம் கோடியைத் தனது பங்களிப்பாக வழங்கியுள்ளது. கேழ்வரகு மற்றும் கரும்பு உற்பத்தியில் தமிழ்நாடு முதல்நிலை வகிக்கிறது. உற்பத்தித்திறன் என்பது பண்ணையிலிருந்து சந்தை வரை, வலுவான கிராமப்புற வருமானத்தைக் குறிக்கிறது.

### சேவை எழுச்சி

தகவல் தொழில்நுட்பம் - தளவாடங்கள் - விருந்தோம்பல் வரை, பரந்தகன்ற அடிப்படையில் நமது சேவைத் துறை 11.3% வளர்ச்சி கண்டுள்ளது. பன்முகப்படுத்தப்பட்ட பொருளாதாரமே, மீள்தன்மை கொண்ட பொருளாதாரம்.

### உள்கட்டமைப்பு மேம்பாடு

சாலைகள், துறைமுகங்கள், தளவாடங்கள், மெட்ரோ விரிவாக்கம் ஆகியவற்றிற்கு மூலதனச் செலவாக ரூ.2.54 லட்சம் கோடி முதலீடு செய்யப்பட்டுள்ளது. இது தொழிற்துறைக்குச் சக்தியூட்டி மக்களை இணைக்கின்றது. இதன் விளைவான முன்னேற்றத்தை நீங்கள் காணவும் பயன்படுத்தவும் முடியும்.

### சீரான நகர்ப்புற வளர்ச்சி

ஒவ்வொரு மாவட்டமும் ஒன்று அல்லது ஒன்றிற்கும் மேற்பட்ட தொழிற்துறை வள ஆதாரங்களைக் கொண்டுள்ளது. இந்தியாவில் தமிழ்நாடு மட்டும்தான் இதனைச் சாதித்துள்ளது. வளர்ச்சி ஒரு நகரத்திற்குள் கட்டுப்படுத்தப்-படவில்லை. மாறாக, வாய்ப்புகள் எல்லா பகுதிகளையும் சென்றடைந்துள்ளன.

### அனைத்தையும் உள்ளடக்கிய சமூக முதலீடு

கல்வி, ஆரோக்கியம், நலன் ஆகியவற்றிற்காக, சமூகத் துறை ரூ.1,57,864 கோடியை செலவு செய்துள்ளது. இதனை ஒரு தொண்டாக அல்லாமல், பொருளாதாரக் கட்டமைப்புப் பணியாகக் கருதுகிறது. ஏனெனில், அனைத்தையும் உள்ளடக்கிய வளர்ச்சியே நிலையான வளர்ச்சி.





## நாடாளுமன்ற அலுவல் மொழிக் குழுவின் 13-ஆவது அறிக்கை:

### குடியரசுத் தலைவரிடம் சமர்ப்பிப்பு



**புது தில்லி, பிப்.16:** நாடாளுமன்ற அலுவல் மொழிக் குழுவின் 13-ஆவது அறிக்கையை குடியரசுத் தலைவர் திரௌபதி முர்முவிடம் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா திங்கள் கிழமை சமர்ப்பித்தார்.

## Most Important Article Related to Official Language

- Article 343 – Official Language of the Union (Hindi in Devanagari script)
- Article 344 – Commission and Committee of Parliament on Official Language
- Article 345 – Official language or languages of a State
- Article 346 – Official language for communication between one State and another
- Article 347 – Special provision relating to the language spoken by a section of the population of a State
- Article 348 – Language to be used in the Supreme Court and High Courts
- Article 349 – Special procedure for enacting certain laws relating to language

| | Amendments | Addition | Languages |
|---|---|---|---|
| 1 | 21st Amendment Act | 1 Language | Sindhi |
| 2 | 71st Amendment Act | 3 Language | Manipuri, Konkani & Nepali |
| 3 | 92nd Amendment Act | 4 Language | Bodo. Dogari, Mathilli & Santhali |

- 8h Schedule to the Constitution consists 22 languages: Assamese, Bengali, Gujarati, Hindi, Kannada, Kashmiri, Konkani, Malayalam, Manipuri, Marathi, Nepali, Oriya, Punjabi, Sanskrit, Sindhi, Tamil, Telugu, Urdu, Bodo, Santhali, Maithili and Dogri.
- Initially there were 14 languages in the 8th Schedules of Indian Constitution

# மத்திய-மாநில உறவுகள்: முதல்வரிடம் உயர்நிலைக் குழு அறிக்கை

சென்னை, பிப். 16: மத்திய, மாநில உறவுகள் குறித்த உயர்நிலைக் குழு அறிக்கையின் முதல் பாகம் முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் திங்கள்கிழமை சமர்ப்பிக்கப்பட்டது.

இதுகுறித்து தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது:

மத்திய, மாநில உறவுகள் குறித்து அறிக்கை தயாரிக்க தமிழக அரசால், உச்சநீதிமன்ற முன்னாள் நீதிபதி குரியன் ஜோசப் தலைமையில் கடந்த 2015 ஏப். 15-இல் உயர்நிலைக் குழு அமைக்கப்பட்டது. இதில் இந்திய கடல்சார் பல்கலை.யின் முன்னாள் துணைவேந்தர் கே. அசோக் வர்தன் ஷெட்டி, தமிழ்நாடு திட்டக் குழுவின் முன்னாள் துணைத் தலைவர் மு.நாகநாதன் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

மத்திய-மாநில உறவுகள் குறித்து தேசிய அளவில் மேற்கொள்ளப்பட்ட நான்காவது முக்கியமான ஆய்வு இது. மேலும், ராஜமன்னார் குழு (1969-71) வழியாக, மத்திய-மாநில உறவுகள் குறித்த உரையாடலை முன்னெடுத்த தமிழ்நாட்டின் இரண்டாவது முயற்சியாகும்.

தேசிய அளவில், சர்க்காரியா ஆணையம் (1983-88) மற்றும் பூஞ்சி ஆணையம் (2007-10) ஆகியவை மத்திய-மாநில உறவுகளை ஆய்வு செய்து பல்வேறு பரிந்துரைகளை வழங்கியுள்ளன.



சென்னை தலைமைச் செயலகத்தில் திங்கள்கிழமை முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் மத்திய-மாநில அரசுகளுக்கு இடையேயான உறவுகளை மேம்படுத்துவது தொடர்பான அறிக்கையைச் சமர்ப்பித்த உச்சநீதிமன்ற முன்னாள் நீதிபதி குரியன் ஜோசப் தலைமையிலான குழுவினர். உடன் தலைமைச் செயலர் நா.முருகானந்தம், பொதுப்பணித் துறை முதன்மைச் செயலர் ரீட்டா ஹரீஷ் தக்கர் உள்ளிட்டோர்.

இந்த ஆய்வுகளுக்குப் பிறகான காலத்தில் ஏற்பட்டுள்ள அரசமைப்பு, நிதி, மற்றும் நிறுவன அளவிலான வளர்ச்சி மாற்றங்கள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, ஒரு புதிய மற்றும் விரிவான ஆய்வின் அவசியம் கருதி, உச்சநீதிமன்ற முன்னாள் நீதிபதி குரியன் ஜோசப் தலைமையிலான உயர்நிலைக் குழு அமைக்கப்பட்டது.

இந்தக் குழு அறிக்கையின் முதல் பாகமானது அதிகாரப் பரவலாக்கத்துக்கும், மாநில சுயாட்சிக்குமான வாதம், அரசமைப்புச் சட்டத் திருத்தம், மாநிலங்களின் ஆட்சியில் ஒருமைப்பாடு, மொழி, ஆளுநர், தொகுதி மறுவரையறை, தேர்தல்கள், கல்வி, சுகாதாரம், சரக்கு மற்றும் சேவை வரி என 10 இயல்களுடன் ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

கூட்டாட்சி முறைக்கு ஏற்பட்டுள்ள சவால்கள் குறித்து விரிவான ஆய்வை மேற்கொண்டுள்ள இந்த அறிக்கை, அரசமைப்புச் சட்டத்தின் வரம்புக்குட்பட்டு கூட்டாட்சி முறையின் சமநிலையை மீட்டெடுக்கவும், உண்மையான கூட்டுறவுக் கூட்டாட்சி முறையை வலுப்படுத்தவும் உறுதியான மற்றும் திட்டவட்டமான பரிந்துரைகளை முன்வைக்கிறது.

முறையே 10 இயல்களைக் கொண்ட மேலும் இரண்டு பாகங்கள் தயார் செய்யப்பட்டு வருகின்றன. இந்த முயற்சியின் ஒரு சிறப்பம்சமாக, அறிக்கையின் தமிழ்ப் பதிப்புக்கு 'திறந்த நிலை அனுமதி' வழங்கப்பட்டுள்ளது. இது நாட்டிலேயே முதல்முறையாகும்.

இந்த அறிக்கை தமிழக சட்டப்பேரவையில் தாக்கல் செய்யப்பட்ட பிறகு, தமிழ் பதிப்பு தமிழக அரசின் அதிகாரபூர்வ இணையதளத்தில் பதிவேற்றப்படும்.

எந்தவொரு தனிநபரோ அல்லது நிறுவனமோ, அதிகாரபூர்வ 'பிடிஎஃப்' கோப்பிலிருந்து தமிழ் பதிப்பை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அச்சிடவோ, மறுபதிப்பு செய்யவோ அல்லது விநியோகிக்கவோ முடியும். இதற்கு மூலாதாரத்தை முறையாகக் குறிப்பிட்டு நன்றி தெரிவிக்க வேண்டும். எந்த மாற்றமும் செய்யக் கூடாது என்பது நிபந்தனை ஆகும்.

பரந்த அளவில் தேசிய ஈடுபாடு உருவாவதை எளிதாக்கும் வகையில், அறிக்கையின் முதல் பாகத்தை ஹிந்தி, வங்காளம், மராத்தி, தெலுங்கு, கன்னடம், மலையாளம், குஜராத்தி, ஒடியா, பஞ்சாபி மற்றும் அஸ்ஸாமி ஆகிய முக்கியமான இந்திய மொழிகளில் மொழிபெயர்க்கும் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

இந்த மொழிபெயர்ப்புகள் இறுதி செய்யப்பட்டவுடன் அவற்றுக்கும் 'திறந்தநிலை அனுமதி' வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த அறிக்கை, இந்தியாவின் கூட்டாட்சி அமைப்பின் பரிணாம வளர்ச்சியில் தமிழகத்தின் தொடர்ச்சியான பங்களிப்பில் முக்கியமான மைல்கல்லாக இருக்கும். இதன் நோக்கம், மத்திய அரசை பலவீனப்படுத்துவது அல்ல; மாறாக மத்திய அரசின் அதிகாரத்தை முறைப்படுத்துவதாகும்.

இதன்மூலம் மத்திய அரசு தேசிய அளவிலான பொறுப்புகளில் கவனம் செலுத்த முடியும். அதேநேரம், மாநிலங்களுக்குத் தேவையான சுயாட்சியை மீட்டளிப்பதன் மூலம் சிறந்த நிர்வாகத்தை உறுதி செய்ய முடியும். இந்த அறிக்கை ஆக்கபூர்வமான உரையாடல்களைத் தூண்டி, சீரான மற்றும் கூட்டுறவு கூட்டாட்சி முறைக்கு வழிவகுக்கும் என தமிழக அரசு நம்புகிறது என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

---

சென்னை, பிப். 16: தமிழக சட்டப்பேரவையில் 2026-27-ஆம் ஆண்டுக்கான இடைக்கால நிதிநிலை அறிக்கையை நிதியமைச்சர் தங்கம் தென்னரசு செவ்வாய்க்கிழமை (பிப். 17) தாக்கல் செய்யவுள்ளார்.

தொடர்ந்து, இடைக்கால வேளாண் நிதிநிலை அறிக்கையை வேளாண் துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தாக்கல் செய்யவுள்ளார்.

தேர்தல் ஆண்டு என்பதால் இடைக்கால நிதிநிலை அறிக்கையில், பல்வேறு சலுகை அறிவிப்புகள் இடம்பெறக்கூடும் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

ஒவ்வோர் ஆண்டும் பிப்ரவரி இறுதி அல்லது மார்ச் முதல் வாரத்தில் நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்வதற்கான சட்டப்பேரவைக் கூட்டத் தொடர் நடைபெறுவது வழக்கம். நிகழாண்டில் பேரவைத் தேர்தல் நடைபெற உள்ளதால் இடைக்கால நிதிநிலை அறிக்கையாக தாக்கல் செய்யப்படுகிறது.

பேரவையில் செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு நிதியமைச்சர் தங்கம் தென்னரசு, இடைக்கால நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்கிறார். இதில், அனைத்துத் தரப்பு மக்களின் எதிர்பார்ப்புகளையும் பூர்த்தி செய்யும் வகையில் பல புதிய திட்டங்கள் இடம்பெறும் என்று தெரிகிறது. குறிப்பாக, பெண்கள், விவசாயிகள், இளைஞர்கள், சிறு வணி

---

# பொருளாதார வளர்ச்சி 11.19%: ஆய்வறிக்கையில் தகவல்

சென்னை, பிப். 16: தமிழகத்தின் பொருளாதார வளர்ச்சி 11.19 சதவீதமாக உள்ளது. இது, நாட்டின் சராசரி வளர்ச்சி விகிதத்தைவிட ஏறத்தாழ இரு மடங்கு என பொருளாதார ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாநில திட்டக் குழுவால் தயாரிக்கப்பட்ட 2025–26–ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு பொருளாதார ஆய்வறிக்கையை முதல்வர் ஸ்டாலின் திங்கள்கிழமை வெளியிட்டார்.

தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில், நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு, தலைமைச் செயலர் நா. முருகானந்தம், மாநில திட்டக் குழுவின் செயல் துணைத் தலைவர் ஜெ. ஜெயரஞ்சன், கூடுதல் தலைமை செயலர் த.உதயச்சந்திரன், திட்டம்– வளர்ச்சி செயலர் சஜ்ஜன் சிங் ரா. சவான் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

பொருளாதார ஆய்வறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது: தமிழகத்தில் தனிநபர் வருமானம் ரூ.3.62 லட்சமாக உயர்ந்துள்ளது. இது நாட்டின் சராசரியைவிட 1.77 மடங்கு அதிகம். உற்பத்தித் தொழில் துறை 14.74 சதவீத வளர்ச்சி விகிதத்தை பதிவு செய்துள்ளது. இது தேசிய சராசரியான 4.5 சதவீதத்தைவிட மும்மடங்கு அதிகம்.

நாட்டின் மொத்த உற்பத்தித் துறை வேலைவாய்ப்பில் 15 சதவீத பங்களிப்பை வழங்கி, அனைத்து மாநிலங்களையும்விட தமிழகம் முதலிடத்தில் உள்ளது. கல்வி, ஆரோக்கியம், சமூக நலத் திட்டங்களுக்காக ரூ.1.57 லட்சம் கோடி செலவிடப்பட்டுள்ளது.

தொழிலாளர் பங்கேற்பு 72.1 சதவீதமாக உயர்ந்திருக்கும் நிலையில், வேலையின்மை 3.5 சதவீதமாக குறைந்துள்ளது. வலுவான உற்பத்தித் திறன், மனித மூலதனம் ஆகியவற்றுடன் ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரத்தை எட்டும் இலக்கை தமிழகம் நிர்ணயித்துள்ளது.

52.07 பில்லியன் டாலர் மதிப்பை எட்டும் வகையில் தமிழகத்திலிருந்து வணிகப் பொருள்களின் ஏற்றுமதி ஏறத்தாழ இரட்டிப்பாகியுள்ளது. அந்நிய நேரடி முதலீடு உயர்ந்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திட்டக் குழு செயல் துணைத் தலைவர் ஜெயரஞ்சன் கூறுகையில், நிகழாண்டு அறிக்கையில் பெண்களின் வேலைவாய்ப்பு மற்றும் பொருளாதாரப் பங்களிப்பு குறித்து தனி அத்தியாயம் இடம்பெற்றுள்ளது. 1,076 கி.மீ. கடற்கரையைக் கொண்ட தமிழகத்தின் கடல் சார் பொருளாதார வளர்ச்சி குறித்த புதிய திட்டங்கள், 2030–க்குள் ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரத்தை எட்டுவதற்கான இலக்கு உள்ளிட்டவை இந்த அறிக்கையின் முக்கிய அம்சங்கள் என்றார் அவர்.

## புலம்பெயர்ந்த தமிழர் நலனுக்கான ‘தமிழர் தடம்’ வலைதளம் தொடக்கம்

**சென்னை, பிப். 16:** புலம்பெயர்ந்த தமிழர் நலனுக்கான ‘தமிழர் தடம்’ வலைதளம் தொடங்கப்பட்டுள்ளது.

உலகெங்கும் வாழும் புலம்பெயர்ந்த தமிழர்களின் இடம்பெயர்வு தொடர்பான வரலாற்றுச் செய்திகள், ஆய்வுக் கட்டுரைகள், குடிபெயர்வு குறிப்புகள், வரலாற்று நிகழ்வுகளைப் பதிவு செய்யவும், பகிரவும் ‘தமிழர் தடம்’ என்ற இணையவழிக் களஞ்சியத்தை தமிழக அரசு உருவாக்கி உள்ளது. https://nrtamils.tn.gov.in/tamilar-thadam/ என்ற இந்த வலைதளத்தை தலைமைச் செயலகத்தில் இருந்து சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் நாசர் திங்கள்கிழமை தொடங்கி வைத்தார்.

**பணி நியமன ஆணைகள் வழங்கல்:** அயலகத் தமிழர் வாழும் பகுதிகளுக்கு பயிற்சி பெற்ற ஆசிரியர்கள், தமிழ்க் கலைஞர்களை அனுப்பி, நேரடிப் பயிற்சி வகுப்புகள் மூலம் அயலகத் தமிழர்களுக்கு தமிழ்மொழி மற்றும் கலைகளை கற்பிக்க ‘தமிழ் மணம்’ என்ற திட்டத்தை தமிழக அரசு தொடங்கி உள்ளது.

இந்தத் திட்டத்துக்காக ரியூனியன், மாலத்தீவு, இந்தோனேஷியா, மலாவி, கம்போடியா உள்ளிட்ட 8 நாடுகளில் பணிபுரிய தேர்வு செய்யப்பட்டுள்ள 10 கலை பயிற்றுநர்களுக்கு அமைச்சர் பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

### ஏற்றுமதியில் முதலிடம்

US $52.07 பில்லியனை எட்டும் வகையில், நமது வணிகப் பொருட்களின் ஏற்றுமதி ஏறத்தாழ இரட்டிப்பாகி உள்ளது. மின்னணுவியல், ஜவுளி மற்றும் தோல் ஏற்றுமதியில் தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது. இதன் மூலம், உலக அளவில் போட்டியிடும் திறனை நாம் அடைந்துள்ளோம்.

### சுகாதாரத்தில் முதன்மை

தமிழ்நாடு சுகாதாரத் தரக்குறியீடுகளில் மிகச்சிறப்பாகத் திகழ்கிறது. இந்தியாவிலேயே மிகக்குறைந்த எண்ணிக்கையாக, தமிழ்நாட்டில் சிசு இறப்பு விகிதம் 1000-க்கு 12. ஆயுள் நீட்சி தேசிய அளவில் இங்கு அதிகம். ஆரோக்கியமான குடிமக்களே, சமூக முன்னேற்றத்தின் உண்மையான அளவீடு.

### டிரில்லியன் பொருளாதாரத்தை எட்டும் பாதையில்...

வலுவான உற்பத்தித்திறன், மனித மூலதனம் ஆகியவற்றுடன் தெளிவான பாதையில், 1 டிரில்லியன் பொருளாதார வளர்ச்சியை எட்டும் இலக்கினை தமிழ்நாடு நிர்ணயித்துள்ளது. அதீத பலத்துடன் வளர்ச்சி, நம்பிக்கையுடன் எதிர்காலத்தின் எழுச்சி.

## NITI Aayog Report on “Scenarios Towards Viksit Bharat and Net Zero”




### 1. Report Overview

- Released by: **NITI Aayog**
- Total reports released: **11 reports**
- Objective:
  - Make India a **USD 30 trillion economy by 2047**
  - Achieve **Net Zero greenhouse gas emissions by 2070**
- Supports India’s **Viksit Bharat 2047 vision**

### 2. GDP Growth Projection

- India’s GDP in 2025: **USD 4.18 trillion**
- Projected GDP by 2047: **USD 30**

## “விக்சித் பாரத் மற்றும் நெட் சீரோ நோக்கி காட்சிகள்” – NITI Aayog அறிக்கை

### 1. அறிக்கை – ஒட்டுமொத்த பார்வை

- வெளியிட்டது: NITI Aayog
- மொத்த அறிக்கைகள்: 11
- முக்கிய நோக்கங்கள்:
  - இந்தியாவை **2047க்குள் USD 30 டிரில்லியன் பொருளாதாரமாக மாற்றுதல்**
  - **2070க்குள் Net Zero (நெட் சீரோ) கார்பன் உமிழ்வை அடைதல்**
- இது **விக்சித் பாரத் 2047 (Viksit Bharat 2047)** இலக்கை ஆதரிக்கிறது

**தேர்வு முக்கிய சொல்:** நீண்டகால பொருளாதார மற்றும் காலநிலை திட்டம்

### 2. மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) வளர்ச்சி கணிப்பு

- 2025ல் இந்தியாவின் GDP: **USD 4.18 டிரில்லியன்**
- 2047ல் எதிர்பார்க்கப்படும் GDP: **USD 30 டிரில்லியன்**
- வளர்ச்சி: **சுமார் 7 மடங்கு**

trillion

- Shows nearly **7 times economic growth**

**3. Electricity Demand Transformation**

- Share of electricity in final energy demand:
  - 2025: **21%**
  - 2070: **60%**

**Meaning:**

- Major shift toward **electrification**
- Reduced dependence on fossil fuels

**Exam keyword:** Electrification of economy

**4. Renewable Energy Capacity Projection**

- Renewable energy capacity expected:
  - **More than 6,000 GW by 2070**

Includes:

- Solar power
- Wind power
- Hydro power
- Green hydrogen-based energy

**5. Nuclear Energy Expansion**

- Current nuclear capacity: **8 GW**
- Expected by 2070: **Over 300 GW**

**Importance:**

- Nuclear energy provides:
  - Clean energy
  - Stable base-load power

**6. Investment Requirement**

- Total investment needed: **USD 22.7 trillion (till 2070)**
- Annual investment required: **USD 500 billion**

Investment areas:

- Renewable energy

**அதிகரிப்பு**

**அர்த்தம்:** இந்தியா உலகின் மிகப்பெரிய பொருளாதார நாடுகளில் ஒன்றாக மாறும்

**3. மின்சார பயன்பாட்டின் அதிகரிப்பு (Electrification)**

- இறுதி ஆற்றல் தேவையில் மின்சாரத்தின் பங்கு:
  - 2025 → **21%**
  - 2070 → **60%**

**அர்த்தம்:**

- மின்சார பயன்பாடு அதிகரிக்கும்
- நிலக்கரி, எண்ணெய் போன்ற எரிபொருட்களின் பயன்பாடு குறையும்

**தேர்வு முக்கிய சொல்:** பொருளாதார மின்மயமாக்கல் (Electrification of Economy)

**4. புதுப்பிக்கத்தக்க ஆற்றல் (Renewable Energy) திறன்**

- 2070க்குள் எதிர்பார்க்கப்படும் திறன்: **6000 GW க்கும் மேல்**

**இதில் அடங்கும்:**

- சூரிய ஆற்றல் (Solar)
- காற்றாலை ஆற்றல் (Wind)
- நீர்மின் ஆற்றல் (Hydro)
- பச்சை ஹைட்ரஜன் (Green Hydrogen)

**5. அணுசக்தி (Nuclear Energy) விரிவாக்கம்**

- தற்போதைய திறன்: **8 GW**
- 2070க்குள்: **300 GW க்கும் மேல்**

**முக்கியத்துவம்:**

- தூய்மையான ஆற்றல்
- தொடர்ந்து கிடைக்கும் அடிப்படை மின்சாரம் (Base-load power)

- Green hydrogen
- Electric vehicles
- Energy infrastructure
- Grid modernization

**7. Net Zero Target – Key Fact**

- India's Net Zero target year: **2070**
- Announced at: **COP26 Glasgow (2021)**

**8. Meaning of Net Zero**

**Net Zero =**
Amount of greenhouse gases emitted = Amount removed from atmosphere

Methods:

- Renewable energy
- Carbon capture
- Afforestation
- Green technologies

**6. முதலீட்டு தேவைகள்**

- மொத்த முதலீடு (2070 வரை): **USD 22.7 டிரில்லியன்**
- ஆண்டுதோறும் தேவையான முதலீடு: **USD 500 பில்லியன்**

**முதலீட்டு துறைகள்:**

- புதுப்பிக்கத்தக்க ஆற்றல்
- பச்சை ஹைட்ரஜன்
- மின்சார வாகனங்கள்
- மின்சார கட்டமைப்பு
- Grid மேம்பாடு

**7. இந்தியாவின் Net Zero இலக்கு**

- இலக்கு ஆண்டு: **2070**
- அறிவித்தது: COP26 (Glasgow, 2021)

**8. Net Zero என்றால் என்ன?**

**Net Zero =**
வெளியிடப்படும் greenhouse gases =
அகற்றப்படும் greenhouse gases

**அடையும் வழிகள்:**

- புதுப்பிக்கத்தக்க ஆற்றல்
- Carbon capture தொழில்நுட்பம்
- மரநடுகை (Afforestation)
- பச்சை தொழில்நுட்பங்கள்

## Global Energy Monitor Report – Renewable Energy 2025

**SOLAR-LED RENEWABLE ENERGY SURGE**

| SEGMENT | 2025* | 2024 | 2023 |
|---|---|---|---|
| Solar# | 35 | 24.6 | 10 |
| Wind | 5.8 | 3.4 | 2.8 |
| Bio power | 0.3 | 0.5 | 0.12 |
| Hydro power^ | 3.4 | 0.2 | NA |
| Total | 44.5 | 28.7 | 12.92 |

(* Jan-Nov) | (# include all segments) | (^ includes small & large hydropower segments) | (NA- Not available)

**1. Report Overview**

- Released by: **Global Energy Monitor**

## "உலகளாவிய ஆற்றல் கண்காணிப்பு அறிக்கை – புதுப்பிக்கத்தக்க ஆற்றல் 2025"

**1. அறிக்கை – ஒட்டுமொத்த பார்வை**

- வெளியிட்டது: Global Energy Monitor
- கவனம்: காற்றாலை (Wind) மற்றும் பெரிய அளவிலான சூரிய (Utility-scale Solar) திட்டங்கள் உலகளாவிய நிலவரம்
- குறிப்பான ஆண்டு: 2025

**2. உலகளாவிய காற்று மற்றும் சூரிய திட்டம் (Wind & Solar Pipeline)**

- Focus: Wind and utility-scale **solar project pipeline** globally
- Year of reference: **2025**

**2. Global Wind & Solar Pipeline**

- **Total pipeline**: **4.9 terawatts (TW)** in 2025
- Growth from 2024: **11% increase** (from 4.4 TW)
- **Significance:** Record high, showing rapid expansion of renewable energy globally.

**3. Country-wise Highlights**

**China**

- Prospective capacity: **1.5 TW+**
- Under construction: **448 GW**

**India**

- Under construction: **125 GW**
- Operating capacity: **163 GW+**

**G7 Countries**

- Share of global prospective capacity: **11%**
- Pipeline: **~520 GW**

**keywords:** China leads global renewable expansion; India emerging as renewable hub; G7 lags.

**4. Global Construction Pipeline**

- Total projects under construction: **758 GW**
- **~75%** of projects located in **China and India**

**5. Gap in Global Targets**

- Current progress is **insufficient** to meet **COP28 2030 target**:
  - Tripling global renewable capacity by 2030

- மொத்த திட்ட திறன்: **4.9 டெராவாட் (TW) – 2025ல்**
- 2024 மாறும் அளவு: **11% வளர்ச்சி** (4.4 TW → 4.9 TW)
- முக்கியத்துவம்: உலகளாவிய புதுப்பிக்கத்தக்க ஆற்றல் **மிகவும் விரைவாக வளர்ந்து வருகிறது**

**3. நாடு-தொகுதி முக்கியங்கள் (Country-wise Highlights)**

**சீனா (China)**

- எதிர்பார்க்கப்படும் திறன்: **1.5 TW க்கும் மேல்**
- கட்டுமானத்தில் உள்ள திறன்: **448 GW**

**இந்தியா (India)**

- கட்டுமானத்தில் உள்ள திறன்: **125 GW**
- செயல்பாட்டில் உள்ள திறன்: **163 GW+**

**G7 நாடுகள் (G7 Countries)**

- உலகளாவிய எதிர்பார்க்கப்படும் திறனில் பங்கு: **11%**
- திட்ட அளவு: சுமார் **520 GW**

**குறிப்புகள்:**

- சீனா: உலகளாவிய புதுப்பிக்கத்தக்க ஆற்றல் முன்னணியில்
- இந்தியா: புதுப்பிக்கத்தக்க ஆற்றல் ஹப் ஆக உருவெடுக்கும்
- G7 நாடுகள்: பின்னிலையில்

**தேர்வு முக்கிய சொற்கள்:** சீனா முன்னிலை; இந்தியா வளர்ந்து வரும் ஹப்; G7 பின்தங்கியது

**4. உலக கட்டுமான திட்ட நிலவரம் (Global Construction Pipeline)**


- கட்டுமானத்தில் உள்ள மொத்த திட்டங்கள்: **758 GW**

The Best Coaching Institute For TNPSC, Bank, SSC, Police Exam, TET Exam, Railways Exams
8939 144 344 www.weshineacademy.com

- சுமார் 75% **திட்டங்கள் சீனா மற்றும் இந்தியாவில்**

**5. உலக இலக்குகளுக்கு இடைவெளி (Gap in Global Targets)**

- தற்போதைய முன்னேற்றம் **COP28 2030 இலக்கை அடைய போதவில்லை**
- இலக்கு: **2030க்குள் உலகளாவிய புதுப்பிக்கத்தக்க ஆற்றல் திறனை 3 மடங்கு அதிகரிக்க வேண்டும்**




| | |
|---|---|
| **Antimicrobial Resistance (AMR) – 2025** | **மின்னணு நோய்க்காரி எதிர்ப்பு– 2025** |

## Snapshot

### 1. Initiative Overview

- Launched by: **World Economic Forum**
- Name: **Davos Compact on Antimicrobial Resistance**
- Year: **2025**
- Aim: **Global action against drug-resistant infections**

**keyword:** Davos Compact 2025 – AMR

### 2. Objective of the Compact

- Mobilize **public and private financing**
- Reduce deaths caused by **AMR**
- Global target: **Save 100 million lives by 2050**

### 3. What is AMR?

- **Definition:** Microorganisms (bacteria, viruses, fungi, parasites) **stop responding to antimicrobial medicines**
- Examples:
    - Antibiotics (for bacteria)
    - Antivirals (for viruses)
    - Antifungals & antiparasitics

**keyword:** Drug resistance in microbes

### 4. AMR in India

- **Annual deaths due to AMR: ~ 6 lakh**
- Shows **serious public health challenge** in India
- **Exam relevance:** India is among the **high-burden countries for AMR deaths**

**1. முன்னெடுப்பு (Initiative Overview)**

- **துவக்கம்:** World Economic Forum
- **பெயர்:** Davos Compact on Antimicrobial Resistance
- **ஆண்டு:** 2025
- **நோக்கம்:** மருந்து எதிர்ப்புக் கொண்ட தொற்றுநோய்களை எதிர்கொள்ள உலகளாவிய நடவடிக்கை

**தேர்வு முக்கிய சொல்:** Davos Compact 2025 – AMR

**2. Davos Compact நோக்கங்கள்**

- பொது மற்றும் தனியார் நிதியை செயல்படுத்துதல் (Mobilize public & private financing)
- AMR காரணமாக ஏற்படும் மரணங்களை குறைத்தல்
- உலகளாவிய இலக்கு: **2050க்குள் 1 கோடி உயிர்களை காப்பாற்றுதல்**

**3. AMR என்றால் என்ன? (What is AMR?)**

- **வரையறை:** பாக்டீரியா, வைரஸ், பூஞ்சி, பராசைட் போன்ற **மைக்ரோஆர்கனிசங்கள்** ஆன்டிமைக்ரோபியல் மருந்துகளுக்கு எதிர்ப்பாக மாறும்
- **உதாரணங்கள்:**
    - பாக்டீரியாவிற்கு: ஆன்டிபயாட்டிக்கள் (Antibiotics)
    - வைரஸ்களுக்கு: ஆன்டிவைரல்ஸ் (Antivirals)
    - பூஞ்சி மற்றும் பராசைட்டுகளுக்கு: ஆன்டிபங்கல்ஸ் & ஆன்டிபராசைட்டிக்ஸ்

**தேர்வு முக்கிய சொல்:** மைக்ரோஆர்கனிசங்களில் மருந்து எதிர்ப்பு (Drug resistance in microbes)

**4. இந்தியாவில் AMR (AMR in India)**

<table>
<tr>
<td></td>
<td>

- வருடாந்திர AMR காரணமாக மரணங்கள்: **சுமார் 6 லட்சம்**
- **முக்கிய செய்தி:** இந்தியாவில் பொதுநல சவால் (Serious public health challenge)
- **தேர்வு பொருத்தம்:** இந்தியா **AMR மரணங்கள் அதிகம் உள்ள நாடுகளில்** ஒன்றாகும்

</td>
</tr>
<tr>
<td>

**State Cyber Crime Coordination Centre (S4C) – 2026**




**1. Overview**

- Launched by: **Ministry of Home Affairs**
- Part of: **Indian Cyber Crime Coordination Centre (I4C)**
- Occasion: National conference on **cyber-enabled frauds**
- Purpose: **Strengthen coordination between states to tackle cybercrime**

**Exam keyword:** S4C – Cybercrime coordination platform

**2. Key Features**

- **Dashboard-based system** for real-time monitoring
- **Bank and financial institution integration:** 62 banks onboarded so far

</td>
<td>

மாநில சைபர் குற்ற ஒருங்கிணைப்பு மையம் (S4C) – 2026

**1. ஒட்டுமொத்த பார்வை (Overview)**

- **துவக்கம்:** Ministry of Home Affairs
- **பகுதி:** இந்திய சைபர் குற்ற ஒத்துழைப்பு மையம் (I4C)
- **நிகழ்ச்சி:** தேசிய மாநாடு – சைபர் மோசடி குறித்த (National conference on cyber-enabled frauds)
- **நோக்கம்:** மாநிலங்களுக்கிடையில் சைபர் குற்றங்களை எதிர்கொள்ள **ஒத்துழைப்பு பலப்படுத்தல்**

**தேர்வு முக்கிய சொல்:** S4C – Cybercrime coordination platform

**2. முக்கிய அம்சங்கள் (Key Features)**

- **Dashboard-based system:** நேரடி கண்காணிப்பு (Real-time monitoring)
- **வங்கி மற்றும் நிதி நிறுவன இணைப்பு:** தற்போது **62 வங்கிகள் இணைந்துள்ளன**
- **இலக்கு:** டிசம்பர் 2026க்குள் அனைத்து வங்கிகள் (சேர்மான வங்கிகள் உட்பட) இணைப்பு
- **மதிப்புள்ள உதவிகள்:**
  - சைபர் மோசடிகளை **விரைவாக கண்டறிதல்**
  - மாநிலங்களுக்கு இடையே **அறிவுத் தகவல் பகிர்வு**
  - சைபர் குற்ற **வழக்கங்களில் ஒருங்கிணைந்த**

</td>
</tr>
</table>

The Best Coaching Institute For TNPSC, Bank, SSC, Police Exam, TET Exam, Railways Exams
8939 144 344
www.weshineacademy.com

<table>
<tr>
<td>

- **Target:** All banks (including cooperative banks) to be onboarded by **December 2026**
- Helps in:
  - Quick detection of cyber-enabled frauds
  - Sharing intelligence between states
  - Coordinated action on cybercrime cases

</td>
<td>

நடவடிக்கை

</td>
</tr>
<tr>
<td>

**India–UK Social Security Agreement – 2026**




**1. Overview**

- Signed between: **India and the United Kingdom**
- Location: **New Delhi**
- Purpose: **Avoid double social security contributions** for employees working temporarily in each other's country
- Duration covered: **Up to 36 months**

**2. Key Features**

- **Supports employee mobility** for short-term overseas assignments
- Ensures **continued social security coverage** during foreign postings
- Part of: **India–UK Comprehensive Economic Trade Agreement (CETA)**
- Effective: Alongside **CETA implementation**

</td>
<td>

இந்தியா-இங்கிலாந்து சமூகப் பாதுகாப்பு ஒப்பந்தம் – 2026

**1. ஒட்டுமொத்த பார்வை (Overview)**

- **கையெழுத்து:** இந்தியா மற்றும் ஐக்கிய இராச்சியம் (UK)
- **இடம்:** நியூ டெல்லி
- **நோக்கம்:** ஒருவரின் நாட்டில் தற்காலிக வேலை செய்யும் பணியாளர்களுக்கான **இரட்டை சமூக பாதுகாப்பு கட்டணத்தை தவிர்த்தல்**
- **கால அவகாசம்: 36 மாதங்கள் வரை**

**2. முக்கிய அம்சங்கள் (Key Features)**

- **Employee mobility:** குறுகிய கால ஓவர் சீஸ் (short-term) பணி அனுப்புவதற்கு ஆதரவு
- **Social security coverage:** வெளிநாட்டுப் பணியில் இருக்கும்போது தொடர்ந்த சமூக பாதுகாப்பு உறுதி
- **பகுதி:** India–UK Comprehensive Economic Trade Agreement (CETA)
- **செயல்படும் காலம்:** CETA நடைமுறைப்படுத்தலுடன் இணைந்து

</td>
</tr>
</table>




## Arctic Sentry Mission – 2026

### 1. Overview

- Launched by: **NATO**
- Mission name: **Arctic Sentry**
- Purpose: Strengthen **security and military coordination** in the Arctic region
- Context: Rising tensions related to **Greenland**, Russian military activity, and China's growing interest

### 2. Key Features

- Coordinates **military activities of NATO countries** under **one command**
- Contributing countries:
  - Denmark
  - Germany
  - Finland
  - United Kingdom
- Focus:
  - Arctic security
  - Permanent security presence discussion
  - Enhanced cooperation among NATO members

### 3. Strategic Importance

- **Countering Russia:** Arctic military

## ஆர்க்டிக் சென்ட்ரி பணி (Arctic Sentry Mission) – 2026

### 1. ஒட்டுமொத்த பார்வை (Overview)

- **துவக்கம்:** NATO
- **பணி பெயர்:** Arctic Sentry
- **நோக்கம்:** ஆர்க்டிக் பகுதியின் **பாதுகாப்பு மற்றும் இராணுவ ஒத்துழைப்பை பலப்படுத்துதல்**
- **பின்னணி:**
  - கிரீன்லாந்தின் நிலவரம்
  - ரஷ்யா இராணுவ நடவடிக்கைகள்
  - சீனாவின் ஆர்க்டிக் ஆர்வம் அதிகரிப்பு


### 2. முக்கிய அம்சங்கள் (Key Features)

- **ஒத்துழைப்பு:** NATO நாடுகளின் இராணுவ நடவடிக்கைகளை ஒரே கட்டுப்பாட்டில் ஒருங்கிணைத்தல்
- **பங்காற்றும் நாடுகள்:**
  - டென்மார்க் (Denmark)
  - ஜெர்மனி (Germany)
  - ஃபின்லாந்து (Finland)
  - ஐக்கிய இராச்சியம் (UK)
- **கவனம்:**
  - ஆர்க்டிக் பாதுகாப்பு
  - நிலையான பாதுகாப்பு முன்னிலையில்

<table>
<tr>
<td>activities<br>

- **Monitoring China:** Growing Arctic interest
- **Securing NATO interests** in the Arctic region
</td>
<td>விவாதங்கள்<br>

  - NATO உறுப்பினர்களின் **உறுதிப் போட்ட ஒத்துழைப்பு**
</td>
</tr>
<tr>
<td>


</td>
<td>


</td>
</tr>
</table>